<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**86/2022

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 10.03.2026

**Dw1 ( வசந்தாமணி)**

**<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>**

1 முதல் 3 பிரதிவாதிகள் பழனாள் (எ) பழனியம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்ல 22.09.2020 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்து போன பழனாள் (எ) பழனியம்மாளுக்கு திருப்பூர் தெற்கு தாலுக்கா முதலிபாளையம் சர்வே எண் 31/34 ல் அமைந்துள்ள சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர் இறந்த பின் நாங்கள் தான் அந்த சொத்தை அனுபவித்து வருகிறோம். பழனாள் (எ) பழனியம்மாள் பெற்ற கடனை அவரது சொத்தின் மூலமாக செலுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்குள்ளது என்றால் சரிதான். பழனாள் (எ) பழனியம்மாள் இறக்கும்போது 3ம் பிரதவாதியுடன் இருந்ததாக சொல்லியுள்ளேன். அவ்வாறுள்ள நிலையில் மேற்படி பழனாள் (எ) பழனியம்மாள் ஏற்படுத்திக் கொடுத்த கடனுறுதி சீட்டை பொறுத்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். பழனாள் (எ) பழனியம்மாள் ஏற்படுத்திக் கொடுத்த கடனுறுதி சீட்டை நீதிமன்ற அனுமதி பெற்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் பார்த்ததாக சொல்வது தவறு என்றும் நான் நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் தான் நீதிமன்றத்தில உள்ள அசல் கடனுறுதி சீட்டை பார்வையிடவில்லை என்றும் வழக்கறிஞரிடம் உள்ள நகலை பார்த்ததாக கூறுகிறார். அசல் கடனுறுதி சீட்டை பார்க்காமல் நகலின்அடிப்படையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் கையொப்பம் செய்யும் வழக்கமுடையவர் அல்ல. வாதி தாவாவிற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிருந்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை படித்து பார்த்து விவரம் தெரிந்து கொண்டோம். வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில்

அறிவிப்பு கொடுக்கவில்லை. வாதியின் அறிவிப்பு கிடைத்த பின் வாதியை அணுகி மேற்படி பழனாள் (எ) பழனியம்மாளுக்கு சொந்தமான சொத்தில் இருந்து வரும் வருமானத்தை கொண்டு கடனை தீர்த்து விடுவதாக பேசினோம் என்றால் சரிதான். ஆனால் தற்போது வரை வாதிக்கு பணம் எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் உள்ள பழனாள் (எ) பழனியம்மாளின் கையொப்பம் இல்லை என மறுத்திருப்பது வழக்கிற்காக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி தாவாவில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2026.03.10 16:56:03 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS